# விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் F1b பாடத்தை வாசிக்கவும்.

ஜெபம்: "பரலோகத்தில் இருக்கும் தேவனே, இந்தப் பாடத்தின் மூலம் என்னுடைய மந்தை ஆபிரகாமைப் போல விசுவாசத்தில் வளர உதவி செய்யும். இதன் மூலம் அவர்கள் கேட்பவர்களாய் மட்டுமல்லாமல், உமது வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவர்களாய் இருப்பார்கள். நாங்கள் நம்புகிற விஷயங்களுக்குக் கீழ்ப்படியுமாறு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தினாலே, ஆமென்."

1. **தேவ வார்த்தையாலும் ஜெபத்தாலும் உங்கள் இருதயத்தையும் மனதையும் ஆயத்தப்படுத்தவும்.**

**மனப்பாடம் :** யாக்கோபு 1:22

ஆபிரகாமிடம் இருந்து **கற்றுக் கொள்ளுதல்:**

- ஆபிரகாம் நமக்கு விசுவாசத்திற்கான உதாரணம் என்று பவுல் கூறியதை **சிந்தித்துப்** பார்க்கவும், கலா 3:6-9. ஆபிரகாமுக்கு நம்மைப் போலவே பலவீனங்கள் இருந்தன; தவறுகளும் செய்தான். ஆனால், வானத்து நட்சத்திரங்களைப் போல அவனுடைய சந்ததியைப் பெருகப் பண்ணுவதாக தேவன் வாக்குத்தத்தம் செய்த போது அவன் விசுவாசித்தான். தேவன் அவனது விசுவாசத்தைக் கண்டு அதை அவனுக்கு நீதியாக எண்ணினார், ஆதி 15:1-6. நாமும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்புவோம். ஆயிரக்கணக்கான விசுவாசிகள் ஆபிரகாமைப் போல விசுவாசித்து அவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகள் ஆவதற்கு நமது பங்கை ஆற்றுவோம்.

ஆதியாகமத்தில் **காண்க:**

- ஆபிரகாமுக்கு தேவன் என்ன வாக்கருளினார், 12:2-3 ல் (ஆபிரகாம் என்று அவனுக்குப் பெயர் மாற்றம் செய்யுமுன் 17:5).
- ஆபிரகாமை நீதிமான் என்று எண்ணும்படியாக ஆபிரகாம் விசுவாசித்தது என்ன, 15:1-6 ல்
- தேவன் ஆபிரகாமுக்குத் தந்த வாக்குத்தத்தத்தை எவ்வாறு உறுதி செய்தார். ஆபிரகாமின் பலியும், பறவைகளை துரத்த செய்த முயற்சிகளும் மட்டுமா அதை உறுதி செய்தது? *(பதில்: தேவன் எல்லாவற்றையும் எப்போதும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்).*
- ஆபிரகாம் தன் சொந்த முயற்சியால் தேவ வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற முயலுதல், 16:1-16 ல்
- ஆபிரகாமின் விசுவாசம் அவனது சகோதரனின் மகனாகிய லோத்துவையும் அவனது மகள்களையும் எவ்வாறு காப்பாற்றியது, 18:1-19:29.
- ஆபிரகாமின் விசுவாசத்தை தேவன் எவ்வாறு சோதித்தார்? என்ன வாக்குத்தத்தம் அருளினார் (எல்லா விசுவாசிகளுக்கும்)



தேவன் நமக்கு விசுவாசத்தை எவ்வாறு கொண்டு வந்தார். உங்களுடைய சொந்த விசுவாசம் எங்கிருந்து வந்தது என்று சிறிது நேரம் சிந்தித்துப் பாருங்கள்: நண்பர்களின் சாட்சிகளில் இருந்தா? வார்த்தையில் இருந்தா? கனவு அல்லது தரிசனத்திலா? பரிசுத்த ஆவியானவரின் அமைதியான உறுதிப்பாட்டிலா? ஜெபத்தாலா? இயேசுவின் நாமத்தினால் நடந்த அற்புதமான சுகமாகுதலாலா?

**2. இந்த வாரத்து நடவடிக்கைகள் குறித்து உடன் ஊழியர்களுடன் திட்டமிடுங்கள்.**

விசுவாசிகள் யாராவது விசுவாசத்தில் பலவீனமாக இருந்து போராடிக் கொண்டிருந்தால் அவர்களை சந்தித்து ஆபிரகாமைப் பற்றியும், உங்கள் விசுவாசத்தைக் குறித்த **சாட்சியையும் கூறவும்.**

தேவையில் இருக்கும் அயலகத்தாருக்கு நடைமுறையில் உதவி, தேவன் தந்த விசுவாசத்தை **எடுத்துக்காட்டவும்.** பலவீனமான விசுவாசத்தால் தள்ளாடுகிறவர்களுக்காக **ஜெபிக்கவும்.**

பகுதி 3 ல் உள்ள ஆராதனை நடிவடிக்கைகள் சிலவற்றை அவர்களுடைய வீட்டில் வைத்து அவர்களை **ஊக்கப்படுத்தவும்.**

**3. வரும் ஆராதனை வேளைக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

விசுவாசிகளின் தேவைக்கும், வட்டாரப் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ற நடிவடிக்கைகளைத் தெரிந்து கொள்க.

ஆபிரகாமின் கதையின் சில பகுதிகளை **நாடகமாக்கலாம்.**

**இந்த உண்மைகளை விளக்கவும்:**

- தேவன் ஆபிரகாமிடம் அவனது உற்றார் உறவினர்களை விட்டு நீங்கி ஓர் அந்நிய தேசத்துக்குப் போகும்படி கூறினார். விசுவாசத்தால் அவன் கீழ்ப்படிந்தான். அவன் தனது மனைவியையும், உறவினர்களையும் அழைத்துக் கொண்டு நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர்கள் பயணம் சென்றான்.
- அந்த தேசத்தில் தேவன் மீண்டும் ஆபிரகாமோடு பேசி அநேக சந்ததியார் உருவாகுவார் என்று வாக்குத்தத்தம் செய்தார். ஆபிரகாம் தேவ வாக்குத்தத்தத்தை விசுவாசித்தான். தேவன் அந்த விசுவாசத்தை நீதியாக எண்ணினார்.
- ஆபிரகாமின் மரபில் வரும் ஒருவர் மூலமாக எல்லா ஜனங்களையும் ஆசீர்வதிக்கப்போவதாக தேவன் வாக்குத்தத்தம் செய்தார்.
- ஆபிரகாமுக்கு பிள்ளை இல்லாததால், இந்த வாக்குத்தத்தம் எவ்வாறு நிறைவேறும் என்று ஆபிரகாமுக்குத் தெரியவில்லை.
- பின்னர் தேவன் ஒரு பலியை ஏற்பாடு செய்யுமாறு ஆபிரகாமிடம் கூறினார். மனிதனோடு உடன்பாடு ஏற்படுத்தும் போது தேவன் எப்போதும் ஒரு பலியை வேண்டுவார். கர்த்தரின் பந்தி தமது இரத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை என்று இயேசு கூறினார்.
- ஆபிரகாம் பறவைகளை பயமுறுத்தி விரட்ட முயன்றான். ஆனால் அவன் களைப்படைந்து ஆழந்த தூக்கத்தில் வீழ்ந்தான். ஆபிரகாம் எதுவும் செய்யாமல் இருக்கும் போது, தேவன் பலியின் நடுவில் கடந்து போவதை ஒரு தரிசனத்தில் கண்டான்.
- தேவன் தாம் ஒருவராகவே தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்பதை ஆபிரகாம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.
- பின்னர் தனது அடிமைப் பெண்ணான ஆகாரின் மூலமாக ஒரு குழந்தையைப் பெற்று அதை சந்ததியாக மாற்றிக் கொள்ளலாம் என்று சாராள் ஆலோசனை கூறினாள்.
- ஆபிரகாமின் அறிவற்ற முயற்சி அளவற்ற துன்பத்தைக் கொண்டு வந்தது. ஆகாரின் சந்ததியாரில் ஒருவன் பின் இஸ்லாமை அறிமுகப்படுத்தினான்.
- ஆபிரகாம் தன் நூறாவது வயதில் மகனைப் பற்றிய வாக்குத்தத்தம் நிறைவேறுவதைக் கண்டான். சாராள் ஈசாக்கைப் பெற்றாள். ஆபிரகாமின் பலியோ சுய முயற்சியோ வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவில்லை. தேவனின் வல்லமை ஒன்றே அதை நிறைவேற்றியது.

- **குறிப்பு:** முஸ்லீம்கள் அருகில் வாழ்ந்தால், ஆபிரகாமுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர் என்பதை விளக்கவும். முதல் மகன், சாராளின் அடிமைப் பெண்ணான ஆகாருக்குப் பிறந்தவன். அவனது பெயர் இஸ்மவேல். அவனே அரபுக்களின் மூதாதை. இஸ்மவேல் ஆபிரகாமுக்கு அவன் மனைவி மூலமாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சந்ததி அல்ல.

- ஆபிரகாமின் இரண்டாவது மகன் அவனுடைய மனைவியான சாராளுக்குப் பிறந்தவன். அவனது பெயர் ஈசாக்கு. அவனே யூதர்களின் ஆதிப் பிதா. ஈசாக்கு மற்றும் யூதர்களின் மூலமாக உலகத்திற்கு தேவனுடைய வாக்குத்தத்தம் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் என ஆபிரகாமுக்கு தேவன் வெளிப்படுத்தினார்.
- ஈசாக்கின் ஒரு வழித்தோன்றலாக யூதரான இயேசு பிறந்தார். இவ்வாறு, இயேசுவிடம் விசுவாசம் வைக்கும் யாவருக்கும், ஆபிரகாமுக்கு செய்யப்பட்ட வாக்குத்தத்தம் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது. முஸ்லீம்களும் இயேசுவை விசுவாசிப்பது அவசியமாகும்.

குழந்தைகள் தாங்கள் தயாரித்ததை வழங்கட்டும். சாட்சிகளைக் கூறும்படிக் கேளுங்கள்.

- புதிய விசுவாசிகளின் வாழ்க்கையை எவ்வாறு தேவ வல்லமை மாற்றிவிடுகிறது?
- தேவன் ஜெபத்திற்கு எவ்வாறு பதிலளித்திருக்கிறார் அல்லது வாக்குத்தத்தத்தை எவ்வாறு நிறைவேற்றி வைத்திருக்கிறார்?

ஆபிரகாமின் பலியைப் பற்றியும், தேவன் எவ்வாறு தமது பிரசன்னத்தைக் காட்டினார் என்பது பற்றியும் ஆதி. 15 லிருந்து கூறி கர்த்தரின் பந்தியை அறிமுகப்படுத்தவும். தேவன் தமது வாக்குத்தத்தத்தை ஒரு பலியின் மூலம் உறுதிப்படுத்துகிறார் என்பதை விளக்கவும். பலியின் மாம்சத்தை தின்றுவிடாதபடி ஆபிரகாம் பறவைகளை விரட்டினான். இயேசுவின் உவமைகளில் பறவைகள் சாத்தானின் தாக்குறவைக் (Influence) குறித்தன. பலிகள் தேவனுக்கு மிகவும் முக்கியமானவைகள் ஆகும். தேவனை கனப்படுத்துவதற்காக நாம் அவைகளை மதிக்கிறோம். கிறிஸ்துவின் சரீரத்தில் பங்கேற்கும் போது, சாத்தானின் 'பறவைகளை' துரத்துவதற்காகவே, கர்த்தரின் பந்தியில் அமரும் முன்னர் நாம் நமது பாவங்களை அறிக்கை இடுகிறோம்.

**கவிதை:** 'விசுவாசத்தின் எதிரி'

பசியோ டிருக்கும் வலுசர்ப்பம் இதுபோல் கத்த விழைகிறது:
"பெரும்பா லான மனிதர்கள் நரகம் வரவே விழைகின்றார்!"

எத்தனை கொடியவ ராகும்படி சில மனிதர்கள் விரும்புகிறார் என்று
நரகின் குட்டி சாத்தான்கள் தெளிவாய்க் காண அவன் விரும்புகிறான்!

வெறுத்தாலும் ஓர் உண்மையினை அவன் ஒத்துக் கொள்ளவே செய்கின்றான்!
"நமது அறிவில் அரையறிவு கொண்ட மனிதனைக் கூட நாம்

நமது வஞ்சனையால் முழுதும் முட்டாளாக்க முடியாது!
நமது பொய்களை அவன் விரும்பி விழுங்கினாலன்றி ஆகாது"

**ஜெபிக்கவும்,** திட்டங்களை உறுதி செய்யவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.

**மனப்பாடம்:** எபே. 2:8-10.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net